முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1612

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.02.2024,** செவ்வாய்கிழமை

1. அறம் வேலிகொண்ட அரங்கனே
அன்னதான ஞானபலம் கொண்ட தேசிகனே
வரம் தந்து உலகோரை மீட்க
வள்ளலாக வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 15 ம் நாள், 27.02.2024, செவ்வாய்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தார் ஞானம் பயின்றால்
3. பயின்றிட்ட மக்களுக்கெல்லாம்
பழுதின்றி ஞான சித்தி உறுதியாகும்
தயவாக அரங்கன் தொடர்பு கூட்டி
தர்மத்தில் தொடர்பு கொண்ட மக்கட்கெல்லாம்
4. தன் கர்மவினை அகலுவதோடு
தர்மபலம் மிகுதியாகி இந்த பேருலகில்
அவரவரும் ஞானவான்களாய் தர்மவான்களாய்
ஆறுமுகன் என் ஆசிக்கு உரியவர்களாக மாறி
5. மாறியே அரங்கன் தேடல்வழி
மாற்றம் தருகின்ற ஞானிகளாக
ஆற்றல்மிகுந்த தர்மபலம் கொண்டவர்களாக
அனைத்திலும் சிறந்தவர்களாக மாறி
6. மாறியே இந்த கலியுகத்தில்
மாற்றம் செய்யும் மகா சக்திகளாக
மாதவசி அரங்கன் தொண்டர்களென
அனைவரும் அடையாளம் கொண்டு

7. பூதலம் எங்கும் நிரம்பி
புண்ணிய பலத்தால் இந்த பேருலகம் ஞானலோகமாகும்
ஆகவே சத்திய யுகமோடு ஞானயுகமாற்றம்
அரங்கன் தவத்தால் கிட்டும்
8. ஆற்றல்மிக்க அரங்கன் தொண்டர்களால்
அமைந்திடும் கலியினில் ஞான ஆட்சி
வகைபட அற்புதத்தை நடத்த
வரமாக வடிவேலன் யான் அரங்கனோடு இணைந்திருக்க
9. அறம் சேர்த்து உலகோர்
அன்னதான சேவை வழி தொடர்ந்தால்
வரமென யாவர்க்கும் சித்தி உறுதி
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–